383

உ

கடவுள் துணை.

பர்மாபாப்பு.

நொண்டிச் சிந்து

இஃது

புகழ்நிறைந்த வணிகர்குலத்திலகர்கள் பர்மியருடைய
நகரில்வந்து வர்த்தகஞ் செய்கின்ற தன்மையாய
தஞ்சாவூர் ஜில்லா கருந்தட்டாங்குடி
க. ஜெயராஜ்சிங்கதிரிபுவனேந்திரரால் இயற்றியது

இரங்கோன்
ரஞ்சிதகதா புத்தகசாலை,
சொந்தக்காரரும்
பிரபல ஜவுளி, தோல்வர்த்தகர்களுமாகிய
பிரேசர் வீதி, 79-வது நெம்பர்கடை
ஆ. க. மு. நாகூர் மீரா சாஹிபு அன் சன்ஸ்
அவர்களால்,
சென்னை.
புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.
1924. [அணா 0-1-6

170865

T. சாரதா புத்தகசாலை.

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட்போஸ்டு, சென்னை.

அதிநூதனம்! (புதியபதிப்பு) வெளிவந்துவிட்டது!

ஆலந்தூர் ஒரிஜினல் டிரமாடிக் கம்பெனியின்
உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ, வித்வான்
வேலூர்- நாராயணசாமி பிள்ளை அவர்களா லியற்றிய
ஸ்ரீமத் ராமாயணம்—மாருதி விஜயமென்னும்

லங்கா தஹனம் (டிராமா)

இச்சரிதையில் ஸ்ரீராமபிரான் ஜானகி பிராட்டியாரின் பிரிவாற்றுமையால் வருந்துவதும்பின்சுக்ரீவன்வராததால்கோபாவேசமுறுவதும், பிறகு தணிந்து ஆஞ்சநேயரிடம் தன் கணையாழியைக் கொடுத்தனுப்புவது முதல் மாருதி லங்கையைத்தாண்டி லங்கணியை வதைத்து ஜானகி பிராட்டியாரைத்தேடிகடைசியாக அசோகவனத்திற்கண்டு தன் விஸ்வரூபத்தை காட்டிதேருதல்சொல்லி தான் அம்மனைக் கண்டதற்கடையாளமாக சூடாமணியைப்பெறுவதும் அக்ஷயனை மடித்து அநேக ராக்ஷதரை வதைத்து ராவணனேடுவாதுபுரிந்து லங்கையை தஹனம் செய்தல் வரையில் முடிவு பெற்றிருக்கிறது. இதில் ஒவ்வொரு பாடல்களுக்கும் தலைப்பில்வர்ணமெட்டுகளும் குறிப்பிட்டிருக்கிறது இதன் விலை அணா 4

அதியுல்லாச சல்லாப லாவணி.

எரியாதகட்சி- எரிந்தகட்சி.

ஐயா! ஆவலுடன் லாவணி வாசிக்கும் அன்பர்களும்இன்னும் மற்றுமுள்ளோர்களும் இன்பமோடறிவிப்பதென்ன வென்றால் சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகளையும் ஆராதர ஜீவோற்பத்தி முதலான விஷயங்களை எளிதில்தெரிந்துக்கொள்வதற்குஇதுவே அறியநூல், இதில் காமதகனன்பேரில் எரிந்தக்கட்சி பாடலும் லாவணி சண்டமாருதம் தி. வைத்தியலிங்கம்பிள்ளை பாடலும் நாகைவெளி காயாரோகம் பிள்ளை பாடலும் நா. வெ. கோவிந்தசாமி உபாத்தியாயர் பாடலும் க, இராமசாமி உபாத்தியாயர் பாடலும் சுப்பிரமணியம் பிள்ளை பாடலும் கருப்பண்ண பிள்ளை பாடலும் இந்த ஒன்பது வித்வான்கள் பாடலும்ஒரேகோர்வையாகத் திரட்டி அச்சிட்டிருப்பதால் வேண்டியவர்கள் எமது விலாசப்படி எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் விலை அணா-6. வி. பி. தபாற்கூலி அணா-3.

சீகாளத்தி புராண வசனம். விலை அணா-6

இதில் சீகாளத்தி க்ஷேத்திரத்தில் முக்திப்பெற்ற அடியார்களின் சரிதையை விவரித்திருக்கிறது. (திருவுருப்படங்களுடன்)

உ

சிவமயம்.

சித்திவிநாயகர் துணை

வேண்பா

சீர்வளர்ப் மாநாட்டின் சிந்துதனைச்செந்தமிழால்
யேர்வளரப் பூவிலிசைப்பவே—வார்வளர்ந்த
கொங்கையுமை தந்தமத குஞ்சரமு கன்றனருள்
தங்குபதநன்குதுணை தான்.

நொண்டிச்சிந்து.

இராகம்.

தொந்தினதினனை தினனை, தொந்தினதினதின தினனை
பாண்டியநாடுதனில் நாங்களும்
பத்தினிமார் பிள்ளையுடன் சுகித்திருந்தோம்
பொருள்மிகத்தேடவென்று எங்கள்
புத்திரர்பெண் டீரைவிட்டுச் சூததப்பிர்மம்போல்
மறையவா தனையழைத்து நாட்பார்த்து
மறுதேசம்பிறப்பிட எத்தனஞ்செய்தோம்
அப்படி யிருக்கும்போது எங்களை
அன்பாகக்கூப்பிட்டார் சம்பத்துடையார்
அதற்குமே சம்மதித்து நாங்களும்
ஆளுக்குதகுந்தபடி சம்பளம் பேசி
முடித்துமுன் பார்த்நாளில் எங்களை
முதலாளிமார்கள் வந்து பயணஞ்செய்தார்
சகுணங்கள் தான்பார்த்தோம் நல்ல
சகுணங்களானதினால் மதுரைவந்து
இறங்கியிருந்தோமன்று சுவாமிக்கு
ஏராளமாயப்பழந் தேங்காய்வாங்கி

அர்ச்சகர் தனையழைத்து சுவாமிக்கு
அர்ச்சனைகள் செய்துமிகப் பணிந்துநின்றோம்
விபூதிபிரசாதம் தந்து
வேண்டியபாக்கியமுடன் வருவீரென்று
கடவுளைப்போலேசொன்ன அர்ச்சகர்க்கு
காணிக்கையாக வேணதளித்து
மறுநாட்காலைதனில் நாங்களும்
மதரூஸ்தன்னிற் சென்றிறங்கி
ஜவுளிபிடவைகளும் நல்லாய
சவுக்கியமாகவே வாங்கிக்கட்டி
இன்னஞ்சில சாமான் வேண்டிய
தெல்லா மொழுங்காகச் சேகரித்து
கப்பலில் போயேறி நாலாநாள்
கண்டோம் இறங்கோன் துறைமுகத்தை
எதிர்கொண்டு வந்தார்கள் எங்கள
இனமானவர்களும் சொந்தக்காரரும்
அவர்களுடன்கூடி நாமும்
அன்பாக விசாரித்து சந்தோஷத்துடன்
கப்பலைவிட்டிறங்கி அவர்களுடன்
கரைதனிற் சென்றுமே காடியிலேறி
வீட்டிற் போய்ச்சேர்ந்து சற்றிருந்து
வென்னீருபோடச்சொல்லிஸ்தானங்கள் செய்தோம்
மடிகள் தரித்துக்கொண்டோம் மேல்வீட்டில்
மயில்வாகனக்கடவுள் தனைப்பணிந்தோம்
போஜனச் சாலையிற்போய் அறுசுவைப்
போஜனங்கள் செய்துமே கையலம்பி
தாம்பூலந்தான் தரித்து பாய்விரித்து
சற்றிளைப்பாறவே நித்திரை செய்தோம்
மாலைப்பொழுதலெழுந்தோம் யெங்கள்
வணிகர்குல தெய்வத்தைப் பணியவென்று
பசுமந்தான் தனிலேபோய் யெங்கள்
பரமகுருபானை போற்றி செய்தோம்.

கற்பூர தீபம்பார்த்து முருகனுக்கு
சாணிக்கை போட்டு விபூதி வாங்கி
தரித்தோம் வினைதீர ஹராஹரா
சாம்பசிவ வென்று தாள்பணிந்து
போய்ச் சேர்ந்தோம் நாட்டுப்புறம் கடைவைக்க
புதிதாய் வீடுகளுந் தானமர்த்தி
வைத்தோம் கடைகளையும் அதுமுதல்
வாங்கல் கொடுக்கல்களுந் தானமர்த்தி
விருமாவிளப்பமென்ன கேட்க
வேடிக்கையாயிருக்குஞ் சொல்லுகிறேன்
பெண்காணியானதேசம் அந்தப்
பெண்டுகள்சொல்கேளாவிடிற்சண்டைகள்வரும்
யாபாரம செய்வதும்பெண் அவர்க
ளாண்பிள்ளை மார்களால் ஒன்றுமில்லை
அழகிற் சிறந்தவர்கள் அவர்களும்
ஆற்றிலே இரண்டு மூன்று தரங்குளிப்பார்
சனைக்கா தனைப்பூசுவார் இரண்டு
சட்டையும் போடுவார் ஒன்றுமேலொன்றாய்
சிவமயிர் முடிப்பார் நல்ல
சிகப்பு சவுக்கங்களு மணிந்துக்கொண்டு
அரையிலே லொங்கிகட்டி குடைபிடித்
தாண்பிள்ளைகள்போற் கைவீசிநடப்பார்
நத்தாவும் பத்திகளும் நல்ல
சீனப்பூச் செண்டுகளும் தான்முடித்து
தோப்பியாங் கொடியுடனே நாய்ச்சோவு
துடுக்காயணிந்துமே மினிக்கிடுவார்
நாணப்படவுமாட்டார் பார்க்க
நடனஞ் செய்தாசிகள் போல நடப்பார்
காந்தர்வமணஞ்செயது கூடிக்
சலக்கிடலாமென்று தானினைத்தால்

மங்கைப்பருவமுள்ள பெண்கள்
வருவார்கள்கோடானுகோடியாக
வகைசொல்ல முடியாது அவர்களை
வேண்டாமென்றாலும் விட்டுப்போகவேமாட்டார்
எந்தநேரமுங்கலவி செய்ய
இணங்கா விடிற்சன வம்புகள்செய்வார்
மதப்பயல் குடியிருக்கும் பர்மா
மாதரையடுத்தவர்க ளாண்டியாய்ப்போவார்
பெலமெல்லாம் வாங்கிக்கொள்வார் நம்மவளையும்
பெண்டுகள் பிள்ளைகளுடன் போகவும்விடார்
ஒரு பிள்ளைபெறும்வரையில் அந்த
ஓதியாகள்மேல்மயக்கம் யாருக்குமுண்டு
ஒருபிள்ளைதான்பெறாறால் அப்புறம்
ஓனாய்கள்போலவேதிரிந்திடுவார்
பிள்ளைக்குறைவுமில்லை அவர்களும்
புருஷனை மதிப்பாக யெண்ணவே மாட்டார்
ஆனதால் சொன்னேனிதை பததிமான்கள்'
ஆராய்ந்து பார்த்தாக்கால் தெரியும் நன்றாய்
நெல்வட்டி கடன்வாங்குவார் செய்தொழில்
நிறைவாகவே மிசசந்தான் கிடைத்தால்
வட்டியுடன் முதல் தருவார் யில்லாவிடில்
வாங்கிய கடன்கொடாமல் ஓடியே போவார்
தேடிப்பிடிப் போமென்றால் கடனீந்தோர்
திரிந்தலைந்தாலும் அகப்படமாட்டார்
ஒருக்கால் கண்டுகேட்டால் கத்தியால்
ஓங்கியே வெட்டுவார் பனங்காயைப்போல்
பகையென்பதாகாது பர்மாவில்
பகைத்தவர் ஆவிகள் அகன்றுவிடும்
மடைப்பயல் ஜாதிகளாம் அறிவுள்ள
மனிதனைக் கொல்லுவதில் லெக்ஷியமில்லை

ஆடுகள் மாடுகள்போல் அவர்கள்
அஞ்சவேமாட்டார் அறிவு கெட்டோர்
மூடப்பயல் ஜாதி ரெம்ப
முறட்டுத்தனங்களாய்த் திரிந்திடுவார்
வசையில்லாச் சேதிசொல்ல அவர்கட்கு
வாராதுவாயினில் என்னாளுமே
நப்பிகள் தின்றிடுவார் நாத்தமுள்ள
நப்பியாம் உளன் தண்ணி தான்குடிப்பார்
வேம்பு சுறை பறங்கி காஞ்சிரை
வெருக்கு புலிபாகை மாங்கொழுந்து
மூங்கிக்கிழங்குகளும் நல்ல
மொச்சை தட்டைபயறு முளையுடனே
மாட்டுக்கறிகளுடன் கெட்ட
மறைபன்றிக் குதிரையின் கறிகளுமே
பாம்பு தவளைகளும் கனி
பத்துக்கா லுள்ளதோர் நண்டுடனே
இன்னஞ்சில சாமான் இவர்கள்
எக்களிப்பாகவே தின்றிடுவார்
இப்படி மனிதருமுண்டோ இவர்களை
என்னவென்று தான்சொல்ல மனதுவரும்
அவர்களிடந்தனிலே பணங்கொடுத்து
அஞ்சுகால் வட்டி முதல்வாங்க
படவுகள் தனிலேறி போம
பாதையிலடித்தாலுங் கேள்வியுண்டோ
அலைகளதிகமானல் படவுடன்
ஆற்றுக்குள் மூள்கியே பிழைக்கவேணும்
காட்டியடிக்கவேணும் இல்லாவிடில்
கனவம்பு பண்ணுவான் சுக்கான்காரன்
எதிர்தண்ணி யாயிருந்தால் அப்பொழுது
எய்யாதடிக்கவேணுங் கைசிவக்க

கைப்பொங்கல் பொங்கவேணும் இல்லாவிடிற்
காயவேணும போனவர்கள் காடுதனிலே
உப்புடன் புளியிருந்தால் வரமிளகாய்
ஒருநாளு மகப்படமாட்டா தங்கே
கையிலே கொண்டு போனல் அதனைக்
காச்சிக் குடிக்க நல்ல யிடமுமில்லை
எட்டுனள் கிடந்தாலும் எங்களை
ஏனென்று கேட்கமனிதரில்லை
பேற்ருேர் பிறந்தாரில்லை யெங்களைப்
பெருமாள் மருகனெனு முருகன் காப்பார்
வணிகர் குலத்துதித்து சம்பளத்திற்கு
வந்ததினுலிப்படித் திரிந்தலைந்தோம்
இரவு பகலுமின்றி நேரம்
இன்னதென்று மில்லாமல்போகவேணும்
பணத்துடையாசையினல் நாமளும்
பட்ட பாடுகள் போதுந்தலைமுறைக்கி
எனங்களிற் கொடுத்ததெல்லாம் புதுக்கணக்
கேஜெண்டின் மனம்போல எழுதிவிட்டு
பாய்க்கியுள்ள யெனங்களிலே கோர்ட்டில்
பிராதுசெய்து சம்மன்களுந் தான்செலுத்தி
வாராத யெனங்களிலே கோர்ட்டில்
வாறண்டு கிளப்பியே சொத்தைப்பிடித்து
ஏலங்கள் தான்போட்டு பணத்தை
யிதமாக வாங்கியே கொடுத்துவிட்டு
சம்பளச்சீட்டும்படி வருஷமூன்றும்
தானிருந்து வேலைகளும் பார்த்துவிட்டு
சம்பளஞ்சாமானும் வழிச்செலவும்
தானுமே வாங்கியே இரங்கோன்வந்து
கப்பலிற் போயேபி ஐந்துநாளும்
கவலையுந் துன்பமு மிகவடைந்து

மதுருசு தனிலிறங்கி அங்கு
 மனதிற்களிப்படைந்து போஜனஞ்செய்து
வேண்டிய சாமானும் நாங்கள்
 விதவிதமாய் வாங்கிப்பொட்டிபோட்டு
ரயிலதனி லேற்றிக்கொண்டு நாங்களும்
 நன்ருகத் தஞ்சாவூர் வந்துசேர்ந்தோம்
வண்டிகள் தான்பிடித்தோம் புதுக்கோட்டை
 மார்க்கமாய் முதலாளி வீடுசென்று
காசுப்பை கணக்குகளும் ஐந்துகையுங்
 கட்டியவர்களிடம் ஒப்பித்துவிட்டு
சம்பளச் சீட்டுவாங்கி அவர்கள் வீட்டில்
 சாப்பிட்டுச் சொல்லிக்கொண்டு வண்டியிலேறி
பிழைத்தோம் பிழைத்தோமென்று யெங்கள்
 பெண்டாட்டி பிள்ளைமுன் வந்துசேர்ந்தோம்

ஐங்கரன் பதம்வாழி சத்தியுமை
 யரியயனெளிர்பர சிவம் வாழி
செங்கர மயில்தாங்கு மயிலேறு
 சேவகன் வள்ளிதெய் வானைவாழி
அருமறை கலைவாழி வேதிய
 ராசர் வைசியர் பின்னவர் வாழி
திருமா மகள்வாழி கலைபொழியுந்
 தேவியினேடுபூ தலம்வாழி
தெந்தின தினணை தினணை
 தெந்தின தினதின தினணை.

முற்றிற்று.

௨

நொண்டிச்சிந்து.

யாதவர் குலத்துதித்த எங்கள்
ஆட்டிடைய ராச்சிசெய்தி கேட்டிடசொல்வேன்
ஆதவன் மரபினோர்கள் கூடி
அரசுபுரியுமுயர் நகரமதில்
காவிரிப்பூம் பட்டினமாம் அதில
கணத்தவணிகர் செல்வர்குலத்துதித்த
மேவியமரச் சோட்டான் செட்டியார் பெற்று
மேவளர்த்தமைந்தனென் பேர்கோவிலனென்பார்
மாதிவள் கண்ணகையென்பார் சிறுவயதில்
மாங்கனிகைக் கொடுத்து மாலையுமிட்டேன்
மாதகியெனும் பேர்கொண்ட தாசியை
வைப்புவைத்துக்கொண்டதினால் சொத்துமிழந்தேன்
மேலுமவளுக்கு நான் கடனாகி
விட்டதாலிவண் சிலம்பைவிற்கவும் வந்தேன்
தாலிகட்டி நாள்முதலாய் இவள்
தன்முகம் பாராமலிருந் தென்னுடன் வந்தாள்
காட்டில் மிகக்கஷ்டமும் பட்டாள் தான்
கால்நடையாய் நடந்துதன் மேனிநொந்திட்டாள்
ஓட்டமாய் ஊருக்குள்சென்று சிலம்பை
உற்றபடி விற்றுவரவேண்டுவதினால்
தையலோரிடத்திருக்க மனம்
தத்தளித்து மெத்தமெத்த துக்கமும் கொண்டேன்
இதுதான் சோதியம்மா வேறு
யாருமில்லை தேறுதலைக் கூறவுமம்மா—யாகேவிலன்

முற்றிற்று.

சென்னை, புவனேஸ்வரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

T. சாரதா புத்தகசாலை.
நே. 23. பாளையப்பன் தெருவு மின்ட் போஸ்டு, சென்னை.

பகவத் கீதை வசனம்,

பாக்கிட்சயிஸ் 18-அத்தியாயங்களும் அடங்கியது.

இதில்வேதாந்தரஹஸயத்திற்கு உபமானமாய் ஸந்தர்ப்பானுசாரமாய் உபநிஷத்வாக்கியங்கள் ஆங்காங்கு உபஹரிக்கப்பட்டிருக்கின்றன.

யோகஜ்ஞானங்களை விளக்கிக்காட்டும் நூற்களில் இவைகளே முதன்மைபெற்றனவாம். அலையுமனத்தைஅகத்தில்அடக்குவதற்கு அரிய பெரிய கருவிகளாகும், கற்றோரேயன்றி மற்றோருங் களிப்புடன் வாசிக்கத்தக்கனவாம். ஏழைகளும் எளிதில் வாங்கும்பொருட்டே பாக்கிட் சயிஸில் விலை மிகவும் சகாயமாய் ஏற்படுத்தப்பட்டது. இதன் விலை அணா-8. ஷை கலிகா 0-10-0

ஷைபெரியவசனம் 1-8-0 ஷைகிரந்தசுலோகம்தமிழ் அர்த்தம் 1-0-0

சகல நாடக கம்பெனிகளில் ஆடி நடாத்தி மனமகிழ்ச்சிபெறும்
மகா பதிவிரதையாகிய

ஞானசவுந்தரி சரித்திரம் (டிராமா)

உலகத்தில் பிறந்த பெண்களுக்கு பகவத்பக்தியே சிறந்ததென்று கற்பிப்பதற்காகவே இந்த ஞானசவுந்தரி சரித்திரத்தை சகல டிராமாக்களிலும் நடத்திவருகின்றமையால் அனேகர்இதனை அச்சிட்டுத் தரவேணுமெனும் விருப்பம்கொண்டதால் இந்தஞானசவுந்தரி சரித்திற்குத் தகுந்தவிதமானபாடல்களும்,அந்தந்த ஆக்ட்சீன்களுக்கிசைந்த விதமான புதிய நூதன வர்ண மெட்டுகளால் அமைத்த, தரு ஜாவளி, விருத்தங்களும் அமைத்துவெகு விமரிசையாய் அச்சிட்டு விற்பனை செய்கிறோம்.

இதன் விலை அணா 4

சகல நாடகக் கம்பெனியாராலும் நடத்திவருகின்ற

லவ-குச சரித்திரம்—(டிராமா)

இது தற்காலத்தில் டிராமா கம்பெனியாகளால் நடத்திவருகின்ற சரித்திரம், இதில் ஸ்ரீராமர் தனது மனவியைப் பிரிந்து அஸ்வமேதயாகம் புரிவதிலிருந்து குசலவர் அஸ்வத்தைப் பிடித்துக்கட்டி அதன்பின், எதிர்த்து வந்தவரை ஜெயித்துக் கீர்த்திபெற்று விளங்கி மகுடாபிஷேகம் நடத்தியவரையிலும் சரித்திர கோர்வையை தவராமல் எழுதி அச்சிட்டு விற்பனை செய்கிறோம்.

இதன் விலை அணா 4

யாபத்தாஹு,

வாருங்கள்! வந்துபாருங்கள்!! களி கூருங்கள்!!!
சந்தோஷங் கொண்டாடுங்கள்!!!!

ரஞ்சிதகதா புத்தகசாலை.

நண்பர்களே! கவனியுங்கள். கவனியுங்கள்.

நமது புத்தகசாலையில் நவீன நாவல்கள், நாடகங்கள், கதைகள், புராணங்கள், காவியங்கள், கீர்த்தனைகள், சரித்திரங்கள், டிராமாக்கள், விலாசங்கள், வைத்தியங்கள், சோதிடங்கள், வேதாந்தம், சித்தாந்தம், ஸ்கூல் தினுசுகள், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், ஒக்கப்பிலேரிகளும், ரவிவர்மா படங்களும், முகம் பார்க்கும் கண்ணாடிகளும், முஸ்லீம் அறபு வாக்கிய எழுத்துப் படங்களும், தோல், பூட்ஸ், ஷூஸ், சிலிப்பர் முதலிய சகல சாமான்களும் விலை சகாயமாய் விற்கப்படும், நேரிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர் ஆர்டர்களை கவனித்து வி. பி. மூலமாய் அனுப்பப்படும். வேண்டிய கனவான்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம்,

ரஞ்சிதகதா புத்தகசாலை,

அ. க. மு. நாகூர் மீரு சாஹிபு அன் சன்ஸ்.

நெ. 79, பிரேசர் ஸ்ட்ரீட்டு, இரங்கூன்.